**தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம் (37 பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம்) - 2018**

---

தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட எஸ்எல் - பி 108 இலக்க 2013 மார்ச் 14 ஆந் திகதியிடப்பட்ட கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செறய்திட்த்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. தேசிய வீதிகளில் பிரதான பாலங்களை நிர்மாணிப்பதன் மூலம் தேசிய வீதி வலையமைப்பை முன்னேற்றுவதும் அதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல் செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 27,250 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 16,132 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 20,914 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 12,381 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 மார்ச் மாதத்தில் ஆரம்பித்திருந்ததுடன் 2019 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | பால நிர்மான வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒரு ஒப்பந்ததாரரூடாக மீளாய்வாண்டின் போது ரூபா 44.83 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தினால் பெறுகை செய்யப்பட்டிருந்த 05 மோட்டார் வாகனங்கள் உரிய சொத்துக்களின் வித்தியாசமான பாவனைக்காலத்தை கருத்தில் கொள்ளாது நிதிக்கூற்றுக்களில் சிவில் நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | கணக்கீட்டு கொள்கையின் தவறான பயன்பாடு. | உடன்பாடு. இது 2019 இல் மீள்திருத்தப்பட்டிருந்தது. | 05 மோட்டார் வாகனங்களின் கிரயமும் தனித்தனியாக அடையாளப்படுத்தப்பட வேண்டியதுடன் ஆதனம் பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் கணக்கிடப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சிவில் நடைமுறை வேலை பெறுமதி மற்றும் செலுத்தவேண்டிய பிடி காசு என்பன கணக்கீட்டு தவறு காரணமாக ரூபா 94.65 | சிவில் நடைமுறை வேலைப்பெறுமதியில் குறைவு. | மேற்படி | உறுதிப்படுத்தப்பட்ட வேலைகளின் பெறுமதி செய்து முடிக்கப்பட்ட வேலைகளின் பெறுமதியாக காட்டப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | இச் செயற்திட்டத்தின் சார்பாக மற்றுமொரு வெளிநாட்டு நிதியளிப்பு செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்த மொத்தமாக ரூபா 10.04 மில்லியன் காணிகளின் கொள்வனவு மீதான இழப்பீடுகள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | காணி கொள்வனவு மீதான கிரயத்தில் குறைவு. | மேற்படி | காணி கொள்வனவின் கிரயத்தின் கீழ் கணக்கிடப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், தெற்கு, வடக்கு, வடமேற்கு, சப்பிரகமுவ மற்றும் மேல் மாகாணத்திலுள்ள 19 தேசிய வீதிகளின் மீது 37 புதிய பாலங்களை மீள்நிர்மானிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டமானது நிர்மான ஒப்பந்தங்களினை 05 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் வழங்கியிருந்தது. தென் மாகாணத்திலுள்ள 10 பாலங்களின் நிர்மான வேலைகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் அதில் 2015 மார்ச் 20 இல் ஆரம்பிக்கப்பட்ட பொலந்துமோதர மற்றும் கொய்யபானவிலுள்ள பாலங்களின் வேலைகளின் தளத்தினை கையளிப்பதற்கு காலம் எடுத்தமை, மேலதிக வேலைகள் மற்றும் பயன்பாட்டு சேவையினை மாற்றுவதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் பல காரணங்களினால் 166 நாட்கள் தொடக்கம் 438 நாட்கள் வரையான வீச்சிலான | பால நிர்மான வேலைகளை பூர்த்தியாக்குவதில் தாமதம் ஏற்படுவதற்கான சாத்தியம். | அசல் திட்டமானது செயற்திட்டத்தின் கீழான 37 பாலங்களின் புணர்நிர்மானத்துடன் உள்ளடங்கியிருந்தாலும் அதன் மீதான நிதியளிப்பு ஏற்பாடுகள் போதுமானதாக காணப்படவில்லை. எனவே, 21 பாலங்களின் நிர்மான வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. | ஆரம்பகட்ட திட்டத்தின் பிரகாரம், பாலங்களின் புணர்நிர்மான வேலைகள் கடனின் காலாவதி காலத்திற்கு முன்னர் அதனை பூர்த்திசெய்வதற்குமுதல் 02 ஆண்டுகளிற்குள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். |

தாமதத்துடன் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. 2016 நவம்பர் 24 இல் ஆரம்பிக்கப்பட்ட வடமாகானத்திலுள்ள 08 புதிய பாலங்களின் நிர்மான நடவடிக்கைகள் கூட 120 இற்கும் அதிகமான நாட்கள் தாமதத்துடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. மேலும், ஏனைய 03 மாகானங்களிலுமுள்ள 19 புதிய பாலங்களின் பால நிர்மான வேலைகள் 2019 ஜூன் 30 இல் உள்ளவாறு கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | பாலங்கள் நிர்மானத்திற்கான அளவைப்பட்டியல்கள் முறையான பொறியியல் கற்கைகளை பின்பற்றாது தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பெறுறோக, தென் மாகானத்திலுள்ள 10 பாலங்களின் 643 உருப்படிகளின் கீழான மேலதிக வேலைகள் ரூபா 396.15 மில்லியன் கிரயத்தில் செய்யப்பட்டிருந்தது. மேலும், வடமாகாணத்திலுள்ள 08 பாலங்களின் ரூபா 443.30 மில்லியன் கிரயத்திலான 832 உருப்படிகளின் கீழான வேலைகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட பூர்திதியாக்கப்பட்டிருக்கவில்லை. வழங்கப்பட்ட ஒப்பந்த பொதிகளின் ஆரம்ப அளவைப்பட்டியலில் | ஒப்பந்த கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | எதிர்பாராத வேலைகளிற்கான நாள் வேலைகளுடன் தொடர்புடய மேலதிக வேலைகள் உறுதியான விபரணம் மற்றும் அளவைப்பட்டியலிலுள்ள அண்ணளவான அளவுகள் மூலம் மறைக்கப்பட முடியாதிருந்தது. | அளவைப்பட்டியல் தயாரிப்பதற்கு முன்னர் விபரமான பொறியியல் கற்கை மற்றும் பரிசோதனை செய்யப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்டிருந்த 122 உருப்படிகளின் கீழான வேலைகளின் நோக்கெல்லை பின்னர் 100 சதவீமாக அதிகரிக்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஆ) | ரூபா 80.71 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2015 மார்ச் 20 இல் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு - காலி - ஹம்பந்தோட்டை - வெல்லலாய வீதியின் பொலந்துமோதர விலுள்ள பாலங்களின் நிர்மான வேலைகள் தெரிவு செய்யப்பட்ட இட அமைவின் மந்தகரமான நிலத்தின் நிலைமை காரணமாக 2016 இல் பின்னர் கைவிடப்பட்டிருந்தது. ரூபா 17.99 மில்லியன் பெறுமதியான வேலைகள், வேலைகளை முடிவுறுத்தும் நேரத்தில் செயற்பாட்டில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் பங்குதாரர்களால் பெறப்படாமல் இருக்கும். | பால கட்டமைப்பின் வடிவமைப்பானது உப மண்ணின் எதிர்பாராத நடத்தை காரணமாக மாற்றமடைந்திருந்தது. இவ் வகையான எதிர்பாராத மாற்றங்கள் சிவில் பொறியியல் நிர்மான செயற்திட்டங்களின் அறிதாக நடைபெற முடியும். | நிர்மானத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் விபரமான பொறியியல் கற்கை மற்றும் மண் பரிசோதனை என்பன அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | செயற்திட்டமானது தென்மாகாணத்தில் பால நிர்மான வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த உத்தியோகத்தர்களின் பாவனைக்காக 15 மோட்டார் வாகனங்களை வாடகைக்கெடுத்திருந்ததுடன் இதன் மீது ரூபா 178.67 மில்லியன் தொகையான ஒதுக்கீடு அளவைப்பட்டியல் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், மொத்தமாக ரூபா 254.42 மில்லியன் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளை மிஞ்சி 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவிடப்பட்டிருந்தது. | இலங்கை அரசாங்கத்திற்கு மேலதிக செலவீடு. | கண்காணிப்பு வேலைகளிங்காக நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கு வாகனங்கள் தேவையாக காணப்பட்டன. | நிர்மான வேலைகளை ஆரம்ப திட்டமிடப்பட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 பயன்படுத்தாத வளங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| கடன் உடன்படிக்கையில் செய்யப்பட்ட ஜப்பான் யென் 12,381 மில்லியன் ஒதுக்கீட்டில் 57 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜப்பான் யென் 7,003 மில்லியன் மாத்திரமே புதிய பாலங்களின் நிர்மானத்தை பூர்த்தியாக்கலில் காணப்பட்ட தாமதம் காரணமாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் ஒப்படைப்புக் கட்டணங்கள் ரூபா 68.53 மில்லியன் பெறுமதி மீளப்பெறப்படாத கடனின் வருமானத்தின் மீது 2018 திசெம்பர் 31 வரை கடன் வழங்கும் முகவரினால் திரும்பப்பெறப்பட்டிருந்தது. | மொத்த ஒதுக்கீடு ஜப்பான் யென் 12,381 மில்லியன் 37 புதிய பாலங்களின் நிர்மானத்திற்காக பயன்படுத்தாமல் போகலாம். | செயற்திட்டத்தின் இன் காலாவதி 2021 ஜூலை 21 இல் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக ஒப்பந்தப் பொதி 03 இன் கீழான சிவில் வேலைகளுடன் நடைமுறைப்படுத்துவதற்கு கொடை வழங்கும் முகவர் சம்மதம் வழங்கியிருக்கவில்லை. | செயற்திட்ட கால எல்லைக்குள் பூர்த்தியாக்குவதற்கு பாலங்கள் நிர்மான வேலைகளை முறையாக திட்டமிடல் வேண்டும். |

### 3.4 காணி சுவீகரிப்பின் மீதான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்டமானது ஒப்பந்தப்பொதிகள் 03 இன் கீழ் 13 பாலங்களை நிர்மாணிப்பதற்காக 180 அரச காணிகள் உள்ளடங்களாக 411 காணித்துண்டுகளை சுவிகரிப்பு செய்ய திட்டமிட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 வரை 88 காணித்துண்டுகளிற்காக ரூபா 248.89 மில்லியன் தொகையான இழப்பீடுகள் செலுத்தப்பட்டிருந்தன. அதற்கு மேலதிகமாக, மொத்தமாக | பால நிர்மானத்தின் பூர்த்தியாக்கலின் தாமதம் மற்றும் காணிகள் சுவீகரிப்பின் வட்டி கிரயங்களில் அதிகரிப்பு என்பன பாதிக்கப்பட்டன. | முறையாக கருத்துரைக்கவில்லை. | நிர்மான வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் காணி சுவிகரிப்பை பூர்த்தியாக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். ஆதற்கு மேலதிகமாக, போதுமான திட்டமிடல், செயற்பாட்டு மீளாய்வு, கண்காணிப்பு மற்றும் |

ரூபா 27.82 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதியில் இழப்பீட்டு கொடுப்பனவுகளை செலுத்துவதில் காணப்பட்ட தாமதத்தின் மீதான வட்டிக்காக செலவிடப்பட்டிருந்தது.

இழப்பீட்டு கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள் என்பன அவசியமாகும்.